## தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.

ந.க. எண் 37802 / டி1 / 2013, நாள் 25.03.2013

பொருள் : தொடக்கக் கல்வி – தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக் கழகத்தால் தொலை தூரக் கல்வி மூலமாக வழங்கப்படும் பி.எட். (இரண்டாண்டு) பட்டம் – பிற பல்கலைக் கழகங்களால் முறையாக வழங்கப்படும் ஓராண்டு படிப்பான பி.எட். பட்டத்திற்கு இணையாக கருதி, ஊக்க ஊதிய உயர்வுகள் பெற அங்கீகரித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளமை – சார்ந்து.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண் 112, பள்ளிக் கல்வி (எம்2) துறை, நாள் 28.07.2011
2. தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க. எண் 22599 / எம்1 / 2009, நாள் 28.07.2011
3. தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க. எண் 37802 / எல்2 / 2010, நாள் 14.09.2011
4. மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களிடமிருந்து தெளிவுரை கோரி பெறப்பட்ட கடிதங்கள்

... ... ...

பார்வை 1ல் காணும் அரசாணையின் நகல் ஏற்கனவே அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தால் தொலைதூரக் கல்வி மூலமாக இரண்டாண்டு கால பி.எட். பட்டம் பயின்றுள்ள நாடுநர்களின் பி.எட். பட்டம் ஏற்கனவே தமிழகத்திலுள்ள இதர அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் (ஓராண்டுகால) பி.எட். பட்டத்திற்கு இணையானது என பார்வை 1ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்படி பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி திட்டத்தின் மூலம் பி.எட். பட்டம் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்குதல் சார்ந்து பார்வை 1ல் காணும் அரசாணை பத்தி 5 மற்றும் 6ல் அறிவுறுத்தியபடி, அரசாணை (நிலை) எண் 42, கல்வித் துறை, நாள் 10.01.1969 ன்படி செயல்படுத்துமாறு அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநர்

25.03.2013

பெறுநர்

அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்